# ஸ்ரீ பிள்ளைலோகாசார்யார் அரிளிச்செய்த

# ஸாரஸங்க்ரஹம்

அகிலஜகத்திதாநுசாஸநபரமான வேதத்திலும், வேதோபப்ரும்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தங்களான ஸ்ம்ருதீதிஹாஸ புராணாதி ஸமஸ்தசாஸ்த்ரங்களிலும் ப்ரஸித்தமாய், ஸர்வேச்வரனுடைய சர்வஸ்வம்மாய், நம் ஆசார்யர்க்களுக்கு ஆவத்தநமாயிருந்துள்ள அர்த்தத்வத்தையும் ப்ரதிபாதிக்கையாலே – த்வயமென்று திருநாமத்தையுடையத்தாயிருந்துள்ள வாக்யத்வயம், பத்து அர்த்தத்தை ப்ரதிப்பாதிக்கிறது.

அதாகிறது – 1. ச்ரிய:பதித்வமும், 2. நாராயணத்வமும், 3. நாராயணனுடைய ஸர்வலோகாசரண்யமான சரணாரவிந்தயுகளமும், 4. அதனுடைய ப்ராபகத்வமும் 5. தத்கோசரமாய் சேதநகதமாயிருந்துள்ள ப்ரார்த்தநாகர்ப்பவிஸ்ரம்பமும், 6. லக்ஷ்மீ தத்வல்லபர்களுடைய நிகிலாத்ம நித்ய கைங்கர்ய ப்ரதாநார்த்தமான நித்ய ஸம்பந்தமும், 7. கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஈஸ்வரனுடைய நிரதிசய போக்யத்தையும், 8. ஸர்வஸ்வாமித்வமும், 9. நித்யகைங்கர்யமும், 10. கைங்கர்யப்ரதிபந்தக நிச்சேஷ நிபர்ஹணமுமாகிற அர்த்தவிசேஷங்கள்; ஈத்ருசார்த்த விசேஷப்ரகாசகமான மந்த்ரவிசேஷத்தினுடைய விவரணரூபமாய், அபௌருஷேயமாய், உபநிஷத்தாயிருந்துள்ள திருவாய்மொழியில் பத்துபத்தாலும் இப்பத்து அர்த்தத்தையும் பூர்வாசார்யர்கள் அடையவே சேர்த்து அநுஸந்தித்துக்கொண்டு போருவார்கள்.

அதில் முதற்பத்தால் – "மலர்மகள் விரும்பும் நம் அரும் பெறலடிகள்" என்றும் "மலராள் மைந்தன்" என்றும், "திருமகளார் தனிக்கேள்வன்" என்றும், "திருவின் மணாளனென்னுடைச் சுழலுளானே" என்றும் "பூமகளார் தனிக்கேள்வன்" என்றும் "மைந்தனை மலராள் மணவாளனை" என்றும் ச்ரிய:பதித்வம் ப்ரதிபாதிதமாய்த்து.

இரண்டாம் பத்தால் – "எம்பெருமான் நாரணற்கு" என்றும் "எம்பிரானெம்மான் நாராயணனாலே" என்றும், "நாரணன் முழுவேலுலகுக்கும் நாதன்" என்றும் நாராயணத்வம் ப்ரதிபாதிதமாய்த்து.

மூன்றாம் பத்தால் – "நான்மலராமடித்தாமரை" என்றும், "அங்கதிரடியன்" என்றும், "அவன் பாதபங்கயம்" என்றும், "அன்று தேர்கடவிய பெருமான் கனைகழல்" என்றும், "மூவுலகுந்தொழுதேத்துஞ் சீரடியான்" என்றும், நாரயணனுடைய ஸர்வலோக சரண்யமான சரணாவிந்தயுகளம் ப்ரதிபாதிதமாய்த்து.

நாலாம் பத்தால் – "இலங்கைநகர் அப்மெரியுய்த்தவர்" என்றும், "வில்வினை தீர்க்குங் கண்ணனை" என்றும், "தொல்வினைத்தீர" என்றும், "வெய்யநோய்கள் முழுதும் வியஞ்ஞாலத்து வீய" என்றும், "மேவிநின்று தொழுவார் வினையோக மேவும்" என்றும், "பிறந்தும் செத்தும் நின்றிடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேன்" என்றும், "நோயே மூப்பிறப்பிறப்புப் பிணியேயென்றிவையொழிய" என்றும், "வேட்கையெல்லாம் விடுத்து – கூட்டரிய திருவடிகள் கூட்டினை" என்றும், "அஃதேயுய்யப்புகுமாறு" என்றும், "உய்வுபாயம் மற்றின்மை தேறி" என்றும், அநிஷ்டநிவ்ருத்தீஷ்டப்ராப்திகரத்வலக்ஷணமான ப்ராபகத்வம் ப்ரதிபாதிதமாய்த்து.

அஞ்சாம் பத்தால் – "தமியேனுக்கருகாய்" என்றும் "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்" என்றும், "உன்னாலல்லால் யாவராலும் ஒன்றுங் குறைவேண்டேன்" என்றும், "அவளை உமிருண்டான் கழல்களவையே சரணாகக்கொண்ட" என்றும், "நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர் சடகோபன்" என்றும், "நாகணைமிசை நம்பிரான் சரணேசரண் நமக்கு" என்றும், "நாடொறுமேகசிந்தயனாய்" என்றும் – தத்கோசரமாய் சேதநகதமாயிருந்துள்ள ப்ரார்த்தநாகர்ப்பவிஸ்ரம்பம் ப்ரதிபாதிதமாய்த்து.

ஆறாம் பத்தால் – "திருமாமகளிருந்தாம் மலிந்திருந்து" என்றும், "அடிமைசெய்வார் திருமாலுக்கே" என்றும், "ஓசிந்தவொண்மலராள்கொழுநான்" என்றும், "என்திருமார்வற்கு" என்றும், "கோலத்திருமாமகளோடுன்னைக் கூடாதே" என்றும் – கைங்கர்ய ப்ரதாநார்த்தமான லக்ஷ்மீதத்வல்லபர்களுடைய நித்யஸம்பந்தம் ப்ரதிபாதிதமாய்த்து.

ஏழாம் பத்தால் – "கன்னலேயமுதே" என்றும்; கொடியேன் பருகின்னமுதே " என்றும்; "அலைகடல் கடைந்த ஆரமுதே" என்றும்; "திருமாலிஞ்சீர், இறப்பெதிர்காலம் பருகிலுமார்வனோ?" என்றும்; "ஏழுலகை இன்பம்பயக்க" என்றும் – கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஈச்வரனுடைய நிரதிசயபோக்யத்வம் ப்ரதிபாதிதமாய்த்து.

எட்டாம் பத்தால் – "அடியனேன் பெரியவம்மான்" என்றும்; "விண்ணவர்கோன் நங்கள்கோனை" என்றும்; "அமர்ந்தநாதனை" என்றும் "மூவுலகாளி" என்றும்; "நேர்பட்ட நிறைமூவுலகுக்கும் நாயகன்" என்றும்; ஸர்வஸ்வாமித்வம் ப்ரதிபாதிதமாய்த்து.

ஒன்பதாம் பத்தால் – "பண்டைநாளாலே நின்திரு வருளும் பங்கயத்தாள் திருவருளுங்கொண்டு நின்கோயில் சீய்த்து" என்றும்; "நிந்தீர்த்தவடிமைக் குற்றேவல் செய்து" என்றும்; "தொடர்ந்து குற்றவல்செய்து: என்றும்; "கொடுவினையேனும் பிடிக்க" என்றும்; "உறுவதிது வென்றுனக்காட்பட்டு" என்றும்; "ஆட்கொள்வானொத்து" என்றும்; நாணும் மீளாவடியமைப் பணிசெய்யப்புகுத்தேன்" என்றும்; நித்யகைங்கர்யம் ப்ரதிபாதிதமாய்த்து.

பத்தாம் பத்தால் – "துயர்கெடுங்கடிது" என்றும்; "கெடுமிடராயவெல்லாம்" என்றும்; "எழுமையும் ஏதஞ்சாரா" என்றும்; "தீரும் நோய் வினைகளெல்லாம்" என்றும்; "இப்பிறப்பறுக்கும்" என்றும்; "உன்றன் திருவுள்ளம் இடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும் எம்பெண்மையாற்றோம்" என்றும்; "பிணியொன்றுஞ்சாரா பிறவிகெடுத்தாளும்" என்றும்; "பிறவித்துயர் கடிந்தோம்" என்றும்; "விண்டேயொழிந்த வினையாயினவெல்லாம்" என்றும்; "அமராவினைகளே" என்றும்; கடுநகரம் புகலொழித்த" என்றும்; "தடுமற்றவினைகள் தவிர்த்தான்" என்றும்; "பிறவிகெடுத்தேன்" என்றும்; "அந்திதொழுஞ்சொல்லுப்பெற்றேன்" என்றும்; "அவாவற்று வீடுபெற்ற" என்றும் – கைங்கர்ய ப்ரதிபந்தக நிச்சேஷநிபர்ஹணம் ப்ரதிபாதிதமாய்த்து.

இப்படி ச்ரிய:பதித்வ ப்ரமுகங்களாய், கைங்கர்ய ப்ரதிபந்தக நிச்சேஷ நிபர்ஹணபர்யந்தங்களாயிருந்துள்ள உபாதேயார்த்தங்களை ப்ரதிபாதிக்கக் கடவதாயிருந்துள்ள வாக்யத்வமும், திருவாய்மொழியும் – பகவச்சரணார்த்திகளாய் அநந்யோபாயப்ரராயிருக்கும் அதிகாரிகளுக்குக் காலக்ஷேபஹேதுவாகவும், போகஹேதுவாகவும், ஈச்வரப்ரீதிஹேதுவாகவும் யாவச்சரீரபாதம் அநுஸந்தேயம்.

ஸாரஸங்க்ரஹம் முற்றிற்று.
ஸ்ரீ பிள்ளைலோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஜீயர் திருவடிகளே சரணம்.